

நகர் ஊரமைப்பு துறை(DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி, சேனாபதிபாளையம் கிராமம், ரீ.ச.எண்: 1473/15B, 1473/15D -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:100 (1 செ.மீ = 1.0 மீ) (திட்டமில்லா பகுதி)

இணையவழி எண் : 48706RB6 நாள்: 31.08.2024

குறிப்பு:

மனைஉட்பிரிவின் பரப்பு : 0.44 ஏக்கர் (அ) 1782.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 08

மனைஉட்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை

பொதுஒதுக்கீடு :

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (1782.00) x (10/100) = 178.20 ச.மீ

ii) (TNCDBR 2019 விதி எண்.47(6) –ன் படி பூங்கா (OSR 10%) பரப்பு 178.20ச.மீ ஈடாக அரசு வரிகாட்டி மதிப்பு தொகை ரூ.9,801.00-னை 30.09.2024 அன்று மனுதாரரால் உரிய கணக்குத்தலைப்பில் செலுத்தியுள்ளார்)

கட்டிட வரம்பு : 9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ –ம் விட்டுவிட வேண்டும்.

9.0மீ முதல் 18.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ –ம் விட்டுவிட வேண்டும்.

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீX1.5மீ –ம் விட்டுவிட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020– ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. இம்மனைஉட்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும் தலைவர், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைஉட்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைஉட்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்,சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைஉட்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பதிவு நுழைவாயிலில் 0.6மீX1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

SWP/DTCP/TIRUPUR/SUBDIVISION APPROVAL NO:231/2024

இரா.க.இளஞ்செழியன்
வரைவாளர் நிலை –II

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tiruppur
Date:2024.10.01 19:07:46

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ,
திருப்பூர் மாவட்டம்.